பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 18 ஞாயிற்றுக்கிழமை 02.01.2022 கதிர் 2842

## 90 கோடி டொலர்களை இந்தியா தருகின்றது

அந்நிய செலாவணி நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இலங்கைக்கு 90 கோடி அமெரிக்க டொலர்களை (சுமார் 20 ஆயிரம் கோடி ரூபாவை) வழங்க இந்தியா தீர்மானித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவற்றில் 40 கோடி அமெரிக்க டொலர்கள் பரிமாற்ற ஒப்பந்தமாகவும்,

2

# டிசெ.22 ஆவணத்திலிருந்து கீழிறங்காது தமிழரசுக் கட்சி

## சம்பந்தன் திட்டவட்டமான முடிவு
## அரசியல் குழுவும் அதே தீர்மானம்



**கொழும்பு, ஜனவரி 02**

**தமிழ் தரப்புகளின் தலைவர்கள் கடந்த 21ஆம் திகதி கொழும்பு குளோபல் டவர் கலந்துரையாடலில் இணங்கி, அடுத்த நாள் திகதியிட்டு இறுதி செய்யப்பட்ட ஆவணத்தின் நிலைப்பாட்டிலிருந்து இலங்கைத் தமிழரசுக் கட்சி இறங்கவே இறங்காது.**

**- இவ்வாறு திட்டவட்டமாகத் தீர்மானம் ஒன்றை எடுத்திருக்கின்றார் தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் எம்.பி.**

2

## இனி எந்தப் பதவியையுமே வகிக்காராம் பி.பீ.ஜயசுந்தர



ஜனாதிபதி செயலாளர் பதவியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர், அரச நிர்வாகத்தில் வேறு எந்த பதவியையும் வகிக்க மாட்டேன்.
- இவ்வாறு ஜனாதிபதி செயலாளர் பி.பீ.ஜயசுந்தர தெரிவித்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் பிபீ ஜயசுந்தர,

2

## பொலிஸ் உத்தியோகத்தர் கூவிலில் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், இளவாலை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கீரிமலை, கூவில் வீதியில் உள்ள வாடகை வீட்டில் இன்று காலை அவர் சடலமாக

2

# நேற்றைய நகல் வரைவை தமிழரசு நிராகரிக்கின்றது

## அரசியல் குழு முடிவு அது என்கிறார் சிறிதரன் எம்.பி.




(ந.லோகதயாளன்,
இ. கலையமுதன்)

யாழ்ப்பாணம்,ஜன.02

தமிழ்ப் பேசும் தரப்புகளின் சார்பில் நேற்று இறுதியாகத் தயாரிக்கப்பட்ட வரைவில் முன்பிருந்த பல விடயம் நீக்கப்பட்டிருப்பதனால் தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழு அதனை முழுமையாக நிராகரித்துள்ளது என கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

தமிழ்ப் பேசும் கட்சிகள் இணைந்து தமிழ்ப் பேசும் மக்களின் பொதுவான நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் ஆவணம் ஒன்றைத் தயாரிப்பது தொடர்பில் இன்று ஊடக மையத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப் பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

## மோ.சைக்கிள் விபத்தில் காதல் ஜோடி மரணம்



பண்டாரகம, வெல்மில்ல பிரதேசத்தில் இன்று அதிகாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள் அதிவேகமாக சென்றதன்

2

## பிரதமர் பதவியில் இருந்து விலகும் எண்ணம் இல்லை

### தெளிவுபடுத்தினார் மஹிந்தர்



"பிரதமர் பதவியில் இருந்து நான் ஓய்வுபெறமாட்டேன். அதற்கான தேவைப்பாடு தற்போது எழவில்லை. - இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அமைச்சரவை மறுசீரமைப்பின் போது பிரதமர் பதவியில் இருந்து மஹிந்த ராஜபக்ஷ ஓய்வு பெறுவார் எனவும், புதிய பிரதமராக ராஜபக்ஷ குடும்பத்தில் உள்ள ஒருவர் நியமிக்கப்படவுள்ளார்

2

## மீன்பிடியில் ஈடுபட்டிருந்தவரை முதலை கடித்துக் கொன்றது

### சாகாமத்தில் நேற்று சம்பவம்

திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள சாகாமம் தாலிபோட்டாற்றில் மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர் ஒருவரை நேற்று முதலை இழுத்துச் சென்ற கடித்ததையடுத்து உயிரிழந்த நிலையில் சடலமாக அவர் மீட்கப்பட்டுள்ளார் என திருக்கோவில் பொலிஸார் தெரிவித்தனர்.

மண்டானை திருக்கோவில் 4 பிரிவைச் சேர்ந்த 55 வயதுடைய இராசநாயகம் விநாயகமூர்த்தி என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

இந்த ஆற்றில் வழமைபோல நேற்றும் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது ஆற்றில்

2

## கிளிநொச்சியில் தீ விபத்து



கிளிநொச்சி கனகபுரம் சேவியர் கடைச் சந்தியருகில் உள்ள தனியாரின் ஹாட்வெயார் கடையொன்றில் தீ விபத்து ஏற்பட் டுள்ளது.

கரைச்சி பிரதேச சபையின் தீயணைப்பு பிரிவினர் மற்றும் இராணுவம், பொதுமக்கள் இணைந்து தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

## 'ஶ்ரீலங்காதீஸ்வர பத்மவிபூண' விருது ஜனாதிபதிக்கு!



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு இன்று பிற்பகல் ஶ்ரீலங்காதீஸ்வர பத்ம விபூண விருது வழங்கப்பட்டுள்ளது.

ஶ்ரீஜயவர்தனபுர கோட்டே ஶ்ரீ கல்யானி சாமரீதர்ம மகா சங்கத்தினால் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

## மோ.சைக்கிள் விபத்தில் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காரணமாக வீதியில் உள்ள பாதுகாப்பு வேலியில் அது மோதி விபத்துக்குள்ளான தாகப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

பண்டாரகம, வல்கம பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞன் மற்றும் கண்டியைச் சேர்ந்த 19 வயதுடைய யுவதி என காதல் ஜோடி ஒன்றே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## பொலிஸ் உத்தியோ .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை ரமணன் (வயது - 47) என்ற பொலிஸ் உத்தியோகத்தரே உயிரிழந்துள்ளார்.

அவரது குடும்பத்தினர் புத்தாண்டை முன்னிட்டு மட்டக்களப்பு சென்றிருந்த நிலையில் பொலிஸ் உத்தியோகத்தர் வீட்டில் தனிமையில் இருந்துள்ளார் என்றும் பொலிஸார் கூறினர்.

அவரது உயிரிழப்புக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

## இனி எந்தப் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அப்பதவியில் இருந்து நாளையுடன் ஓய்வு பெறுகின்றார்.

இந்நிலையில் அவருக்கு அரச ஆலோசகர் அல்லது நிதி அமைச்சின் ஆலோசகர் பதவி வழங்கப்படும் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவ்வாறானதொரு பின்பலத்திலேயே, இனி எந்தப் பதவியையும் வகிக்க போவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

சந்திரிகா, மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய ஜனாதிபதிகளின் கீழ் நான் முக்கிய பதவிகளை வகித்துள்ளேன். எனவே, ஓய்வுபெற்ற பின்னர் புத்தகமொன்றை எழுதவுள்ளேன் எனவும் பி.பீ.ஜயசுந்தர மேலும் தெரிவித்தார்.

## டிசெ.22 ஆவணத்தி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுவும் நேற்றிரவு இணைய முறையில் கலந்துரையாடி அத்தகைய தீர்மானம் ஒன்றை எடுத்திருக்கின்றது.

தமது முடிவை ஏனைய கட்சிகளின் தலைவர்களுக்குத் தெரியப்படுத்தும்படி தமிழரசுப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனைப் பணித்த சம்பந்தன், அதேசமயம், தமிழ்ப் பேசும் தரப்புகள் ஒற்றுமைப்பட்ட நிலைப்பாட்டை எடுக்கவும், ஒற்றுமைப்பட்டு செயற்படவும் தற்போது மேற்கொள்ளப்படும் முயற்சிகள் தொடரவேண்டும் என்பதையும், கலந்துரையாடல் சந்திப்புகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதையும் ஏனைய கட்சிகளின் தலைவர்களுக்குத் தெரியப்படுத்தும்படியும் சுமந்திரனைக் கேட்டுக்கொண்டார். மலையக மற்றும் முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களின் கருத்துக்களுக்கு முக்கியத்துவமளிக்கும் ஆவணம் ஒன்றின் நகல் வடிவம் நேற்று சுமந்திரனின் இல்லத்தில் கூடிய கூட்டத்தில் தயாரிக்கப்பட்டது.

அந்த நகல் வடிவம் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என்று நேற்றிரவே தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு கூடித் தீர்மானம் எடுத்து சுமந்திரன் மூலமாக சம்பந்தன் ஐயாவுக்கும் அந்த முடிவை அறிவித்தது.

இன்று காலை தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுவின் தீர்மானத்துடன் சம்பந்தன் ஐயாவை சுமந்திரன் சந்தித்தார்.

அதையடுத்தே சம்பந்தன் ஐயா தமது முடிவை சுமந்திரனுக்குத் தெரியப்படுத்தினார்.

சம்பந்தனின் இந்தத் தீர்மானத்தை இன்று நண்பகலே தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு உறுப்பினர்களுக்கு சுமந்திரன் தெரியப்படுத்தினார் எனவும் அறிய வந்தது. (உ)

## 90 கோடி டொலர்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மிகுதி 50 கோடி அமெரிக்க டொலர்கள் எரிபொருள் கொள்வனவுக்காக கடனாகவும் வழங்கப்பட உள்ளன எனத் தெரியவந்துள்ளது.

அத்தியாவசிய உணவு மற்றும் மருந்துகளை வாங்குவதற்காகக் கடனாக மேலும் நூறு கோடி அமெரிக்க டொலர்களைப் பின்னர் வழங்குவதற்கும் இந்தியா தீர்மானித்திருப்பதாகவும் கூறப்பட்டது.

## பிரதமர் பதவியில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எனவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில், இது தொடர்பில் சிங்கள வார இதழொன்று பிரதமரிடம் வினவியுள்ளது.

அதற்குப் பதிலளித்துள்ள அவர், பிரதமர் பதவியில் தான் நீடிப்பார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் கருத்துச் சுதந்திரம் இருக்கின்றது. அதனைப் பயன்படுத்தி சிலர் அரசுக்கு எதிராகக் கருத்துகளைப் பரப்பி வருகின்றனர். எனினும், அறிவுள்ள மக்கள் இதனை நம்பமாட்டார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மீன்பிடியில் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இருந்த முதலை அவரை பிடித்து கடித்து நீரினில் இழுத்துச் சென்று கடித்து குதறியுள்ளது. பின்னர் அவர் உயிரிழந்துள்ள நிலையில் சடலமமாக மீட்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

## நேற்றைய நகல் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
1987இல் யாருக்காக ஒப்பந்தம் எழுதப்பட்டதோ அவர்களோடு போரிடுவதாகவே இறுதியில் அந்த ஒப்பந்தம் அமைந்தது. அதனால் இந்த 13ஆம் திருத்தச் சட்டத்தால் எமக்கு எந்த முன்னேற்றமும் கிடையாது. இந்தியா எப்போதும் இலங்கையில் பூகோள ரீதியில் கரிசனையாக இருந்தாலும், ஆட்சி அதிகாரத்தில் இந்திய மாநில அதிகாரத்திற்கு மேலதிகமாக இங்கு இருக்கக் கூடாது என்பதை உறுதிப்படுத்துவதிலும் குறியாக இருக்கின்றது. இந்தியாவிற்கும் இலங்கைக்கும் அடிப்படையில் - சூழலில் - வேறுபாடு உண்டு.

கூட்டாட்சி தொடர்பில் சிந்தியுங்கள் என 6ஆண்டுகளிற்கு முனபே பாரதப் பிரதமர் நரேந்திர மோடியே கூறிய நிலையில், நாம் இன்றும் அந்த 13ஐ கோரப் போகின்றோமா என்ற பெரும் கேள்வியும் உள்ளது.

ஜெயலலிதா தமிழக சட்டசபையில் நிறைவேற்றிய கண்டனத் தீர்மானத்தைக் குறைக்கும் வகையிலான ஓர் கோரிக்கையினையா நாம் தற்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் முன் வைக்கப்போகின்றோம்? இதனை ஏன் கட்சியில் இன்னும் விரிவாகப் பேசவில்லை?

அரசியல் தீர்வு தொடர்பில் தெளிவான பார்வை இருந்திருக்க வேண்டும். இவ் விடயத்தில் தெளிவாகப் பயணிக்க வேண்டிய கூட்டமைப்பும் குழம்பியிருக்கின்றதோ என்ற எண்ணம் பலரிடம் தோன்றுகின்றது.

முதலில் எழுதிய கடிதத்தில் சமஷ்டி வடிவில் எமது கோரிக்கைகளை உள்ளடக்கிய பல விடயங்கள் இருந்தன. ஆனால் தற்போது இரண்டாவதாக எழுதிய வரைவில் பல விடயங்கள் நீக்கப்பட்டிருக்கின்றமையால் தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழு அதனை முழுமையாக நிராகரித்துள்ளது.

மாகாணசபை தேர்தலை நடத்த வலியுறுத்துமாறு கோரி பாரதப் பிரதமரிற்கு கடிதம் எழுத வேண்டிய அவசியமோ நியாயமோ இல்லை. ஏனெனில் இந்த அரசு போன்று நாம் தேர்தலைக் கண்டு பயப்பிடவில்லை. தேர்தலிற்கு கூட்டமைப்பு தயாராகவே இருக்கின்றது. வெளியில் ஒரு மாயை உண்டு. அதாவது ரெலோ கொண்டு வந்த நல்ல விடயத்தை தமிழ் அரசுக் கட்சி எதிர்ப்பதாக எண்ணுகின்றனர். இந்த 13ஐக் கோருவதுதான் அந்த நல்ல விடயமாம்.

இந்தியாவின் கொல்லைப்புறம் வரையில் இன்னுமோர் நாடு வந்த பின்பும், அயல் நாட்டின் உள் விவகாரத்தில் தலையிட மாட்டோம் என இந்தியா தொடர்ந்தும் கூறப்போகின்றதா என்பதனை இந்தியாதான் சிந்திக்க வேண்டும்.

இதனால் வரைவு தொடர்ந்தும் தயாரிக்கும் பணியில் ஈடுபட வேண்டிய அவசியம் இல்லை என்பதே நிலைப்பாடு. நேற்றைய வரைவு எமது அபிலாஷையினையோ தீர்வையோ கொண்டிருக்கவில்லை என்பதனைப் பகிரங்கமாக கூறுகின்றேன்.

ரவூவ் ஹக்கீமைப் பொறுத்தமட்டில் அவரது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களே அவரது கட்டுப்பாட்டில் இல்லாத நிலையில் தமிழர்களின் தீர்வு விடயத்தில் அவர் எவ்வாறு தீர்வை முன்வைப்பது?

எங்களுடைய கொள்கையோடு நில்லுங்கள் என நாம் அவர்களை நிர்ப்பந்திக்க முடியாது. அதேபோல் தமது நிலைப்பாட்டுடன் ஒத்துபோக வேண்டும் என்ற எண்ணத்தை அவர்கள் எம் மீது திணிக்கவும் முடியாது.

2015 இலங்கை வந்திருந்த பாரதப் பிரதமர் தன்னுடைய 13ஐ வருட முதலமைச்சர் கால அனுபவத்தில் ஈழத்தமிழர்களுக்கான அரசியல் தீர்வுக்கு கூட்டு சமஷ்டி முறையே பொருத்தமானதென இலங்கை நாடாளுமன்றத்தில் தெளிவாக ஒரு கருத்தைச் சொன்னார். அவ்வாறு கூறுபவரிடம் 13ஆம் திருத்தத்தை அமல்படுத்த கோரி நாம் கடிதம் எழுதுவது எந்தளவு தூரம் ஏற்றுக்கொள்ளக்கூடியது?

யார் பெரியவர், யார் சிறியவர் என்ற ஏற்றத் தாழ்வு பிரச்சினை காரணமாகவே அமெரிக்காவுக்கு ஒரு தரப்பு செல்ல இன்னொரு தரப்பு 13 அமுல்படுத்துங்கள் என்று சொல்லிவிடுதிகளில் கூட்டங்களை நடத்துகிறார்கள். இதன்போது முஸ்லிம் தரப்புகள் மற்றும் மலையகத்தைச் சேர்ந்த சகோதரர்களும் இணைந்துள்ளனர்.

முஸ்லிம்களின் அபிலாஷைகள் வித்தியாசமானவை. அதேபோல மலையகத் தமிழர்களது அபிலாஷைகள் வித்தியாசமானவை. வடக்குக் கிழக்கில் வாழ்கின்ற தமிழர்களது அரசியல் அபிலாஷைகள் வித்தியாசமானவை.

ஒரு வாரத்துக்கு முன்னர் ஒரு வரைவு தயாரிக்கப்பட்டு இருக்கின்றது. ஒரு வாரத்துக்கு முன்னர் தயாரிக்கப்பட்ட வரைவை ஏற்றுக் கொள்கிறோம். இது தொடர்பாக நேற்றைய தினம் இலங்கை தமிழரசுக்கட்சியினுடைய அரசியல் குழுக் கூட்டத்தில் அது பற்றிய விளக்கம் அளிக்கப்பட்டது. இரண்டாவது வரைவு பற்றியும் இதன்போது விளக்கம் அளிக்கப்பட்டது. முதலாவது வரைவில் உள்ள பல விடயங்கள் இல்லாமலாக்கப்பட்டு வெறும் கண்துடைப்புக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துங்கள் என்று கூறுவதாக இந்த வரைவு காணப்பட்டது.

தமிழ்தேசிய இனப்பிரச்சினைக்கான நிரந்தர தீர்வை எட்டுவதற்கு சமஷ்டியையே முன்வைக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கை.

நாங்கள் மாகாண சபை தேர்தலை நடத்த வேண்டாம் எனக் கூறவில்லை . அதேபோல நாங்கள் மாகாண சபை தேர்தலை நடத்தவும் கூறத் தேவையில்லை. தேர்தல் சட்டங்களின் படி நடத்தியிருக்க வேண்டும். இந்திய பிரதமரிடம் தேர்தலை நடத்துங்கள் என்று கட்சிகள் கோருவதில் நியாயம் இல்லை. அதை கேட்க வேண்டிய அவசியமும் இல்லை. - என்றார் அவர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

Personal English Classes
K.Ganesh (BA.Pera)
Grade 10, GCE O/L
Literature 2022, 2023
Grade 7 - GCE O/L, A/L,
பட்டதாரிகள், தொழில்புரிவோர்
Spoken Grammar
கற்கமுடியும்.
077 766 8725
நீராவியடி, யாழ்நகர்.







சொர்க்கம்
திருமண சேவை
இல.102/A , பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
| --- | --- |
| பிறந்த திகதி - 21.08.1987 மதம் - இந்து<br>ஜாதி - N ஆண்<br>நட்சத்திரம் - புனர்பூசம் 4ம் பதம்<br>கி.பா - செவ் - 7 இல் சூரிய செவ்வாய்<br>தகைமை - BA<br>தொழில் - ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு - படித்த அழகிய பெண் | பிறந்த திகதி - 22.08.1992 மதம் - இந்து<br>ஜாதி - V பெண் நட்சத்திரம் - ரோகிணி<br>கி.பா -<br>செவ் - 12<br>தகைமை - HNDA<br>தொழில் - MOH<br>எதிர்பார்ப்பு - உத்தியோகம் |
| பிறந்த திகதி - 16.02.1985 மதம் - இந்து<br>ஜாதி - S ஆண் நட்சத்திரம் - பூராடம்<br>கி.பா - செவ் - 4 இல்<br>தகைமை -<br>தொழில் - ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு - உத்தியோகம் பெண் | பிறந்த திகதி - 03.09.1994 மதம் - இந்து<br>ஜாதி - N பெண் நட்சத்திரம் - பூசம்<br>கி.பா - செவ் - 7 இல்<br>தகைமை - BA<br>தொழில் -<br>எதிர்பார்ப்பு - உத்தியோக மணமகன் |
| பிறந்த திகதி - 24.10.1989 மதம் - இந்து<br>ஜாதி - V ஆண் நட்சத்திரம் - மகம்<br>கி.பா - செவ் - 2இல்<br>தகைமை - அரச உத்தியோகம் தொழில் - அரச உத்தியோகம்<br>எதிர்பார்ப்பு - உத்தியோகம் பெண் இல்லாதுவிடில் சீதனம் கொடுக்கக் கூடிய பெண் | பிறந்த திகதி - 04.01.1994 மதம் - இந்து<br>ஜாதி - N பெண் நட்சத்திரம் - அஸ்தம்<br>கி.பா - செவ் - 7 இல் சூரி/ செவ்<br>தகைமை - BA தொழில் -<br>எதிர்பார்ப்பு - உத்தியோக மணமகன் |

077 650 5097, 077 887 6969
தலைமை அலுவலகம் - கனடா - 001415666611855

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## முயற்சி தொடரட்டும்

தமிழ் பேசும் தரப்புகளின் ஒற்றுமைப் பட்ட நிலைப் பாட்டைப் பிரதிபலிக்கும் பொது ஆவணம் ஒன்றைத் தயாரிக்கும் முயற்சி மீண்டும் முடங்கும் நிலையை எட்டியிருக்கிறது.

கடந்த 26 ஆம் திகதி கூடிய தமிழ் பேசும் தரப்புகளின் தலைவர்கள் – இலங்கைத் தமிழரசுக் கட்சி உட்பட – ஓர் ஒற்றுமைப்பட்ட ஆவணத்துக்கு அங்கீகாரம் தந் தனர். ஆனால், அதன் பின்னர் அது குறித்து தமது கட்சிகளுக்குள் ஆராய்ந்த மலையக, முஸ்லிம் கட்சி களின் தலைவர்கள் தமக்கு அந்த ஆவணத்தில் ஆட்சேபனைகள் இருப்பதாகத் தெரிவித்தனர். மீண் டும் தலைவர்கள் கூடிப் பேசினர். மலையக மற்றும் முஸ்லிம் மக்களின் எதிர்பார்ப்பை நிறைவு செய்யும் நகல் ஆவணம் ஒன்று நேற்று தயாரிக்கப்பட்டது. ஆனால் அது இணக்கமான – ஏற்றுக்கொள்ளப்பட்ட – ஆவணம் அல்ல. ஒரு நகல் வடிவம் மட்டுமே. அதனை ஒவ்வொரு கட்சியும் ஆராய்ந்த பின்னர் ஒரு தீர்மானத்தை எடுக்கலாம் என்ற அளவிலேயே நேற் றைய நகல் தயாரிப்பு வேலைகள் நிறுத்தப்பட்டன.

அதன் பின்னர் நேற்றிரவு இணைய வழி மூலம் உரையாடிய தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு, நேற் றுத் தயாரித்த நகல் ஆவணம் தமிழரசுக் கட்சிக்கு ஏற்புடையது அல்ல என்ற முடிவுக்கு வந்தது. அந்த அரசியல் குழுக் கூட்டத்தில் பங்கு பற்றிய தமிழ் அரசின் பேச்சாளர் சுமந்திரன் உட்பட அனைவரினதும் கருத்து அதுவாகவே இருந்தது. இந்த விடயத்தை சம்பந்தன் ஐயாவிடம் தெரிவித்து, அவர் வழியில் நடவடிக்கை எடுக்க சம்பந்தனுக்கு உதவியாக இருக்கும்படி தமி ழரசு அரசியல் குழு சுமந்திரனைப் பணித்தது. இது குறித்து சுமந்திரன் – சம்பந்தன் இன்று காலை கூடி விரிவாக ஆராய்ந்தனர்.

தமிழரசின் அரசியல் குழுவின் நிலைப்பாட்டை சம்பந்தன் முழுமையாக ஏற்றுக்கொண்டார் எனத் தெரிகின்றது. அது சரியானது; நியாயமானது என்று குறிப்பிட்ட அவர், அது தொடர்பில் இரண்டு வழிகாட்டு தல்களை வழங்கினார் என அறிய வந்தது.

ஒன்று – நேற்றுத் தயாரான நகல் ஆவணம் தமிழ ரசுக் கட்சிக்கும் தனக்கும் ஏற்புடையதல்ல என்பதை ஏனைய கட்சித் தலைவர்களுக்கும் தெரியப்படுத் துங்கள்.

இரண்டாவது – அதற்காக ஒற்றுமைப்பட்டு ஆவணம் தயாரிக்கும் முயற்சியைக் கைவிடத் தேவை இல்லை. தொடர்ந்து உரையாடுவோம் என்பதை ஏனைய கட்சித் தலைவர்களுக்கும் தெரியப்படுத்துங்கள். இந்த இரண்டும்தான் சம்பந்தன் எடுத்த முடிவுகள்.

அதே சமயம், நேற்றுத் தயாரிக்கப்பட்ட நகல் வடி வத்தை ஏற்பது இல்லை என்ற முடிவை சம்பந்தன் ஐயாவுக்குத் தெரியப்படுத்துங்கள். அவர் முடிவு ஒன்றை எடுத்து, உரிய நடவடிக்கை மேற்கொண்டு முன்னெடுப்பார் என்றே தமிழரசு அரசியல் குழு சுமந் திரனைப் பணித்திருந்தது.

அரசியல் குழுவின் தீர்மானத்தை பகிரங்கப்படுத்தி, தமிழர் தரப்புகளின் ஒற்றுமைப்பட்ட முயற்சி நொண்டு கின்றது என்பதை வெளிப்படுத்த தமிழரசின் அரசியல் குழு தீர்மானிக்கவில்லை.

ஆனால், அரசியல் குழுவில் ஓர் உறுப்பினரான சிறிதரன் எம்.பி. தனிப்பட்ட முறையில் இந்த விட யத்தை அறிவித்து வெளிப்படுத்தியிருக்கின்றார். அதற்காக ஒற்றுமைப்பட்டு செயற்படும் தமிழர் தரப்புக ளின் முயற்சி அடிபட்டுப் போய்விட்டது என்று கருதத் தேவையில்லை. முயற்சி தொடரட்டும்.

# அரசில் எந்தவொரு பதவியையும் இனி ஏற்றுக்கொள்ள மாட்டேன்!

## பீ.பி.ஜயசுந்தர திட்டவட்டம்



அரசாங்கத்தில் எந்தவொரு பதவியையும் இனி ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 31 ஆம் திகதி தாம் ஜனாதிபதி செயலாளர் பதவியிலிருந்து ஓய்வுபெற்றுக் கொண்டதன் பின்னர் அரசாங்கத்தின் ஆலோசகர் பதவிக்கோ அல்லது வேறு அரச பொறுப்புக்களையோ ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிங்களப் பத்திரிகையொன்றுக்கு அவர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

தாம் வேலையில்லா பட்டதாரி கிடையாது என்பதால் அரசாங்கத்திடம் பதவி ஒன்றை எதிர்பார்த்துக் காத்திருக்கப் போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஓய்வுபெற்றுக் கொண்டதன் பின்னர் தனது தொழில் அனுபவங்களை ஒன்று திரட்டி நூல் ஒன்றை எழுத உள்ளார் எனவும் தெரிவித்துள்ளார். சந்திரிகா பண்டாரநாயக்க, மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரின் அரசாங்கங்களில் முக்கிய பொறுப்புக்களை வகித்த தாம் எதிர்வரும் நாளகளில் ஓய்வாக இருக்க விரும்புவதாகத் தெரிவித்துள்ளார். புதிய ஜனாதிபதி செயலா ளர் காமினி செனவிரத்னவிற்கு தமது வாழ்த் துக்களைக் கூறியதாகவும், அவர் சிறந்த ஓர் அதிகாரி எனவும் தெரிவித்துள்ளார்.

அவருக்கு ஏதேனும் உதவிகள் தேவைப்பட்டால் அதனைச் செய்யத் தயார் என பீ.பி.ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

# தீவகப் பகுதிகளில் கூட்டுறவுத் துறையை முன்னேற்ற வடக்கு ஆளுநர் ஜீவன் திட்டம்

தீவகப் பகுதிகளில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை முன்னேற்று வதற்காக வடமாகாண ஆளுநர் ஜீவன் தியா கராஜா நடவடிக்கை எடுத்துள்ளார்.

தீவகத்தில் செயற்படுகின்ற பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் கட்டட நிர்மாண பொருள்களை விற்பனை செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வேலணை, ஊர்காவற்துறை, காரைநகர் புங்குடு தீவு ஆகிய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் குறித்த பொருள்கள் விற்பனை செய்யப்படவுள்ளன.

எதிர்வரும் 5ஆம் திகதி வேலணை காரைநகர் 6 ஆம் திகதி ஊர்காவற்துறை அதனைத் தொடர்ந்து புங்குடுதீவு நயினா தீவிலும் செயற்படுத்தப்படவுள்ளது.

கூட்டுறவுத்துறை மூலம் அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளவுள்ளதாகவும் இதன்போது தெரிவித்துள்ளார்.

# அடுத்துவரும் வாரங்களில் மின்சார நெருக்கடி ஏற்படும்!

## பொறியியலாளர் சங்கத்தின் செயலாளர் எச்சரிக்கை

அடுத்து வரும் வாரங்களில் நாட்டில் மின்சார நெருக்கடி ஏற்படும் என இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர் சங்கத் தின் செயலாளர் தம்மிக்க விமலரத்ன தெரி வித்துள்ளார்.

இலங்கை மின்சார சபை நீண்டகாலத் திட்டங்களை நடைமுறைப்படுத்தாததன் காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள மின் நெருக்கடி யைத் தவிர்ப்பதற்காக மின் பொறியிய லாளர்கள் முன்வைக்கப்பட்ட குறுகிய கால, நடுத்தர கால மற்றும் நீண்ட காலத் திட்டங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன என வும், இதனால் இந்த மின்சார நெருக்கடிக்கு முகம் கொடுக்க நேரிடும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சியம்பலாண்டுவ பிரதேசத்தில் 100 மெகாவாட் காற்றாலை அமைக்கத் திட்டமி டப்பட்டு, 2017 ஆம் ஆண்டு முதல் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. அதேபோன்று கெரவலப்பிட்டியவில் 350 மெகாவாட் காற் றாலை நிர்மாணப் பணிகள் இன்னும் நிறைவடையவில்லை எனவும் அவர் தெரி வித்துள்ளார். மின்சார சபையின் சகல செயற்பாடு களும் நிறைவடைந்து 150 மெகாவாட் சூரிய சக்தி மின் நிலையத்தை அமைப்பதற்கான காணியைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதற்கான காணி தொடர்பான தகவல் கள் துறைசார் அமைச்சரின் ஒப்புதலுக்காக ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு ஒன்றரை வருடங்கள் கடந்துள்ளன. ஆனால் அது இன்னும் அமைச்சரின் கைகளிலேயே உள்ளது. இந்தப் பிரச்சினைகளுடன் நாட்டில் கச்சா எண்ணெய் இல்லாமையால் எதிர் காலத்தில் எரிபொருள் மின் நிலை யங்கள் நிறுத்தப்படும். இந்த மின்சார நெருக்கடி ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## புதுவருட கொண்டாட்டத்தால் ஏற்பட்ட விபரீதம்:

# அவசர சிகிச்சைப் பிரிவுகளில் 188 நோயாளர்கள் சேர்ப்பு!

புத்தாண்டு கொண்டாட்டங்களில் ஈடுபட்ட போது ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக நால்வர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதாவது புத்தாண்டை வரவேற்பதற்காக பட்டாசு வெடிப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட போது நால்வர் காயமடைந்துள்ளனர்.

இதற்கமைய, வெள்ளிக்கிழமை இரவு மாத்திரம் 188 பேர் அவசர சிகிச்சைப் பிரிவுகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அவர்களில் 82 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை, நேற்று நாட்டின் பல பகுதிகளில் விபத்து சம்பவங்கள் அதிகளவு பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 2022இல் கொரோனாவை வெல்வோம் உலக சுகாதார அமைப்பு நம்பிக்கை




உலக சுகாதார அமைப்பின் (WHO) தலைவர் டெட்ரோஸ் அதானம் கேப்ரேயேசூஸ், 2022இல் கொரோனா வைரஸ் தொற்றுநோயை வெல்வோம் என்று நம்பிக்கையுடன் இருப்பதாக தெரிவித்துள்ளார்.

தமது புத்தாண்டு செய்தியில் குறுகிய தேசியவாதம் மற்றும் தடுப்பூசி பதுக்கல் செயல்பாடுகளை அவர் எச்சரித்தார். கொரோனா தொற்று என உலகம் அறிந்திராத காலத்தில் சீனாவில் அறியப்படாத நிமோனியா பாதிப்பு குறித்து உலக சுகாதார அமைப்புக்கு முதன்முதலில் அறிவிக்கப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, அந்த வைரஸ் தொற்றை 2022இல் வெல்வோம் என்ற கருத்தை வெளியிட்டிருக்கிறார் கேப்ரேயேசூஸ்.

உலக அளவில் கொரோனா பாதிப்புகளின் எண்ணிக்கை இப்போது 287 மில்லியனாக உள்ளது. அதே நேரத்தில் கிட்டத்தட்ட 5.5 மில்லியன் மக்கள் அந்த வைரஸ் பாதிப்பால் இறந்துள்ளனர்.

உலகெங்கிலும் உள்ள மக்கள் புத்தாண்டை வரவேற்கும் வேளையில் அதை அவர்கள் கொண்டாட முடியாத வகையில் பல்வேறு நாடுகளில் கடுமையான கட்டுப்பாடுகள் அமல்படுத்தப்பட்டுள்ளன.

இந்த இரண்டு ஆண்டு காலத்தில் கொரோனா வைரஸ், பல நாடுகளில் மக்களின் அன்றாட வாழ்வின் ஒரு பகுதியாகி விட்டது. சில நாடுகள் அவற்றின் எல்லைகளை மூடியுள்ளன. பல நாடுகளில் குடும்பங்கள் வைரஸ் பாதிப்பு மற்றும் கட்டுப்பாடுகள் காரணமாக பிரிந்து இருக்கின்றன.

சில இடங்களில் முக கவசத்தை அணியாமல் மக்கள் வீட்டை விட்டு வெளியேறுவதை நினைத்துக்கூட பார்க்க முடியாத நிலையை கொரோனா வைரஸ் ஏற்படுத்தியிருக்கிறது.

இந்த வைரஸ் பாதிப்பை எதிர்கொள்ள இரண்டு டோஸ் தடுப்பூசி அவசியம் என்று வலியுறுத்தப்பட்டு வந்த நிலையில், தற்போது உருமாறி வரும் கொரோனா திரிவில் இருந்து மக்கள் தங்களைப் பாதுகாக்க சிறப்பு டோஸ் போட்டுக் கொள்ளும் வாய்ப்புகளும் ஆராயப்பட்டு வருகின்றன. சில மேற்கு நாடுகள் இந்த சிறப்பு டோஸ் திட்டத்தை அமல்படுத்தியும் வருகின்றன.

# வீழ்ச்சி அடைந்த பொருளாதாரத்தை மீட்பதே இந்த ஆண்டுத் திட்டம்!

## வட கொரியா கிம் புத்தாண்டு உரை



வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மீட்டெடுப்பதே இந்த ஆண்டு தேசிய முன்னுரிமையாக இருக்கும் என வடகொரிய தலைவர் கிம் ஜாங் உன் தெரிவித்துள்ளார்.

கிம் ஜாங் உன் ஆட்சிக்கு வந்து10ஆண்டுகள்நிறைவடைந்துள்ள நிலையில், ஆளுங்கட்சியின் முக்கிய கூட்டத்தின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவல் ஒருபுறம் இருக்க, வட கொரியாவில் தொடர்ந்தும் உணவு தட்டுப்பாடு நிலவிவருகின்றது.

இந்நிலையில் வளர்ச்சியை அதிகரிப்பதும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதும் முக்கியப் பணி என கிம் ஜாங் உன் தெரிவித்தார்.

மக்களுக்கான உணவு, உடை மற்றும் வீட்டுப் பிரச்சினையைத் தீர்க்கும் அதேநேரம் கொரோனா தொற்றினை எதிர்த்துப் போராடுவதும் இந்த ஆண்டின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாகும் என அவர் கூறினார்.

இதேநேரம் அவரது உரையில் அமெரிக்கா அல்லது தென் கொரியா பற்றி நேரடியாக எந்த கருத்தையும் குறிப்பிடவில்லை என்பது சுட்டிக்காட்டத்தக்கது.



## மெக்சிகோவில் மர்ம நபர்கள் துப்பாக்கி சூடு!

# குழந்தை உட்பட 8 பேர் பலி

மெக்சிகோ, குவானா ஜுவாடோ மாகாணத்தில் சிலாவ் நகரில் மர்ம நபர்கள் இருவரினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் துப்பாக்கி தாக்குதலில் குழந்தை உட்பட 8 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த மர்ம நபர்கள் இருவரும் மோட்டார் சைக்கிளில் வந்து அங்குள்ள வீடுகளுக்குள் புகுந்து திடீர் துப்பாக்கி தாக்குதலை நடத்தி விட்டு சம்பவ இடத்தினை விட்டு தப்பி ஓடியுள்ளனர்.

இந்த திடீர் தாக்குதலில் ஒரு வயது குழந்தை மற்றும் 16 வயது சிறுமி உட்பட 8 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் என்று செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைவருக்கும் இனிய புதுவருட நல்வாழ்த்துக்கள்
வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத் தருகின்றோம்
ஆகாஸ் நகைமாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும்.
076 825 7716 - (ஆகாஸ்)

# நட்பு ரீதியில் ஐஸ் ஹொக்கி விளையாடினர் ரஷ்ய மற்றும் பெலாரஸ் ஜனாதிபதிகள்



ரஷ்ய ஜனாதிபதி புட்டின், பெலாரஸ் ஜனாதிபதி அலெக்சாண்டர் லுகாஷென்கோவும் செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்கில் இராஜாங்க ரீதியிலான பேச்சு நடத்திய பிறகு ஐஸ் ஹொக்கி விளையாடியுள்ளனர்.

நட்பு ரீதியாக, உள்ளூர் ஹாக்கி அணியுடன் இணைந்து, இருவரும் ஒரே அணிக்காக விளையாடிய நிலையில் அதிபர் புடின் 7 கோல்களையும், அதிபர் லூகாஎன்கோ 2 கோல்களும் அடித்தனர். இறுதியில் அவர்களது அணி 18-7 என்ற கணக்கில் வெற்றி பெற்றது

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தமிழகத்தில் கொரோனாவின் 3ஆவது அலை ஆரம்பித்து விட்டது என அமைச்சர் தகவல்



சென்னை சைதாப்பேட்டையில் இன்று மெகா தடுப்பூசி முகாமை தமிழக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பார்வையிட்டார். பின்னர் அவர் ஊடகவியலாளர்களைச் சந்தித்து உரையாடினார். அப்போது அவர், தமிழகத்தில் 86.22 சதவீதம் பேர் முதல் தவணை தடுப்பூசியும் 58.82 சதவீதம் பேர் 2 ஆவது தவணை தடுப்பூசியும் செலுத்திக்கொண்டுள்ளனர்.

சென்னையை பொறுத்த வரை 5 லட்சம் பேர் இன்னும் முதல் தவணை தடுப்பூசியே போட்டுக்கொள்ளவில்லை. அனைவருக்கும் முதல் தவணை தடுப்பூசியை விரைந்து போடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

கொரோனாவின் மூன்றாவது அலை ஏற்கனவே தொடங்கிவிட்டது. உலக அளவில் வேகமாக பரவிக்கொண்டு இருக்கிறது. கொரோனாவின் உருமாற்ற வைரஸ்களான டெல்டாவும், ஒமிக்ரோனும் சேர்ந்து இந்த அலையில் வேகமாக தாக்குகின்றன. உலக அளவில் கடந்த ஏப்ரல் மாதம் ஒரேநாள் தொற்று 29 லட்சத்து நான்காயிரமாக இருந்தது. அதுதான் உச்ச பட்சமாகவும் இருந்தது.

ஆனால் இந்த 3 ஆவது அலையில் ஒரேநாளில் உலகம் முழுவதும் 18 லட்சத்து 91 ஆயிரம் பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளது. கடந்த மே மாதம் 21 ஆம் திகதி தமிழகத்தில் ஒரேநாளில் தொற்று 36 ஆயிரத்து 84 ஆக இருந்தது. 3 ஆவது அலையில் அந்த அளவுக்கு உச்சத்துக்குப் போகுமா? என்ற அச்சமும் உள்ளது. ஆனால், ஒரே ஆறுதலாக ஒமிக்ரோன் தொற்று ஏற்பட்டவர்களுக்கு 3 அல்லது 4 நாள்களில் நெகட்டிவ் முடிவு வந்துவிடுகிறது.

முதல் 3 நாள் முடிந்ததும், மாதிரி எடுக்கப்படுகிறது. அப்போதே நெகட்டிவ் வந்து விடுகிறது. இருந்தாலும் 5 நாட்கள் வரை அவர்களை வைத்தியசாலைகளில் தங்க வைத்து மீண்டும் டெஸ்ட் எடுக்கப்படுகிறது. அப்போதும் நெகட்டிவ் வருவதால் அதன்பிறகு வீடுகளுக்கு அனுப்பி விடுகிறோம்.

எனவே இனி ஒமிக்ரோன் தொற்று கண்டவர்கள் 5 நாள்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றால் போதும் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

தொற்று பரவுகிறது என்பதற்காக மக்கள் தேவையில்லாமல் பதட்டமோ, அச்சமோ அடைய வேண்டாம். தொற்று பரவாமலும், அணுகாமலும் இருக்க தடுப்பூசிகளை போட்டுக் கொள்ளவேண்டும். கட்டாயமாக முகக்கவசம் அணிந்து வெளியே செல்ல வேண்டும். தேவையில்லாமல் வெளியில் சுற்றுவதையும், கூட்டம் கூடுவதையும் தவிர்க்க வேண்டும், என்று வலியுறுத்தியிருக்கிறார்.



## இம்முறையும் தமிழக சட்டசபைக் கூட்டத்தொடர் கலைவாணர் அரங்கில் நடைபெறுமென அறிவிப்பு

கொரோனா பரவல் காரணமாக தமிழக சட்டசபை கூட்டத்தொடர் கடந்த 2020 ஆம் ஆண்டு முதல் கலைவாணர் அரங்கிலேயே நடத்தப்பட்டு வந்தது. கடந்த மாதம் வரை கொரோனா பரவல் குறைந்திருந்த காரணத்தால் வருகிற 5 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள சட்டசபைக் கூட்டத்தை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் முன்னர் போன்று நடத்த முடிவு செய்யப்பட்டது.

ஆளுநர் உரையுடன் தொடங்கக்கூடிய இந்தக் கூட்டத்தொடரில் புதிய ஆளுநரான ஆர்.என்.ரவி உரை நிகழ்த்துவார் என்று சபாநாயகர் அப்பாவு கடந்த மாதம் அறிவித்திருந்தார். இதையொட்டி செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் உள்ள சட்டசபை வளாகம் புதுப்பிக்கப்பட்டு எம்.எல்.ஏ.க்களுக்கு கணினி வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டன.

இதற்கிடையே கொரோனா பரவல் இப்போது அதிகரித்து வருவதால் கூடுதல் கட்டுப்பாடுகள் தமிழகத்தில் நேற்றுமுதல் நடைமுறைக்கு வந்துள்ளன. குறிப்பாக, அனைத்து அரங்கங்களிலும் அனுமதிக்கப்பட்ட இருக்கைகளில் அதிகபட்சம் 50 சதவீத பார்வையாளர்களுடன் மட்டுமே செயற்பட அனுமதிக்கப்பட்டுள்ளது.

எனவே, சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்கும் வகையில், செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் நடைபெற இருந்த சட்டசபைக் கூட்டத்தொடரை மீண்டும் கலைவாணர் அரங்கத்துக்கு மாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. கலைவாணர் அரங்கத்தில் ஜனவரி 5ஆம் திகதி காலை 10 மணிக்கு சட்ட சபையை கூட்ட ஆளுநர் அழைப்பு விடுத்திருக்கிறார் எனத் தமிழக சட்டசபைச் செயலாளர் சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

## சபரிமலையில் பக்தர்கள் தரிசன நேரம் நீடிப்பு

கேரள மாநிலம் சபரிமலையில் உள்ள ஐயப்பன் கோவிலில் இந்த ஆண்டுக்கான மகர விளக்கு பூசை வருகிற 14 ஆம் திகதி நடைபெறவிருக்கிறது. இதற்காக கடந்த 30 ஆம் திகதி மாலை கோவில் நடை திறக்கப்பட்டது. கொவிட் கட்டுப் பாடுகளோடு பக்தர்கள் கோவிலுக்குள் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.



மகரவிளக்குவிழாநாள்களில் தினமும் அறுபதாயிரம் பக்தர்கள் கோவிலுக்கு செல்ல ஆலய நிர்வாகம் அனுமதி வழங்கியுள்ளது. கோவிலுக்குச் செல்ல உடனடி முன்பதிவு செய்வோர் அனைவரும் தற்போது தரிசனத்திற்கு அனுமதிக்கப்பட்டு வருகிறார்கள். கோவிலுக்கு செல்ல கூடுதல் பக்தர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதால் சபரிமலையில் பக்தர்கள் கூட்டம் அலைமோதுகிறது. இதையடுத்து பம்பையில் இருந்து சன்னிதானம் செல்லும் எருமேலி பெருவழிப்பாதையும் திறந்து விடப்பட்டுள்ளது. இப்போது பக்தர்கள் வருகை அதிகரித்திருப்பதால் கோவில் நடை அடைக்கும் நேரத்தை நீடிக்க வேண்டும் என்று பக்தர் கள் கோரிக்கை விடுத்ததையடுத்து, கோவில் நடை அடைக்கும் நேரத்தை இரவு 10 மணியிலிருந்து 11 மணி வரை ஒரு மணித்தியாலத்தினால் நீடிக்க கோவில் நிர்வாகம் முடிவு செய்துள்ளது. நேற்று ஆங்கிலப் புத்தாண்டு என்பதாலும், இன்று ஞாயிறு விடுமுறை நாள் என்பதாலும் கோவிலில் நேற்றும் இன்றும் கூட்டம் அதிகமாக இருந்தது. பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து சரண கோஷம் முழங்க ஐயப்பனைத் தரிசனம் செய்துள்ளனர்.

## கொரோனாப் பரவலைத் தடுக்க உடனடியாக கடும் கட்டுப்பாடுகளை விதிக்க பரிந்துரை

இந்தியாவில் ஒமிக்ரோன் வைரஸ் பரவலைத் தொடர்ந்து தினசரி கொரோனாத் தொற்று எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. இந்நிலையில் கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக இந்திய மத்திய சுகாதாரத்துறைச் செயலாளர் ராஜேஷ் பூன் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேச அரசுகளுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில், இந்தியாவில் கடந்த 70 நாள்களில் இல்லாத அளவு தினசரி தொற்று 16 ஆயிரத்து 764 ஆக பதிவாகியுள்ளது. ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் தினசரி தொற்றின் வேகம் அதிகரிப்பது வைரஸின் அதிவேக பரவல் தன்மையைக் காட்டுகிறது.

இதனால், இந்தியாவில் பாதிப்பை கட்டுப்படுத்தும் வகையில் மாநிலங்கள் தேவைக்கேற்ப தற்காலிக சிகிச்சை மையங்களை உருவாக்கவேண்டும்.




கொரோனா பாதிப்பு அதிகமாகும்போது ஆரம்ப சிகிச்சையை வீட்டில் இருந்தே பெறும்படி நடவடிக்கை எடுக்கவேண்டும். வீட்டுத் தனிப்படுத்தலில் இருப் போரைக் கண்காணிக்க சிறப்பு குழுவை ஏற்படுத்த வேண்டும்.

மாவட்ட வாரியாக கொரோனாக் கட்டுப்பாட்டு மையங்களை அமைக்க வேண்டும். கொரோனா பரவல் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் தடுப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும். கொரோனா சிகிச்சை மையங்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். மாநில அரசுகள் ஆரம்ப கட்டத்திலேயே கொரோனா பரவலை தடுக்க கடும் கட்டுப்பாடுகளை தாமதிக்காமல் அமல்படுத்த வேண்டும், என்று தெரிவித்துள்ளார்.

# நாடாளுமன்ற உறுப்பினர் நஷீர் அஹமட்டின் கருத்துக்கு நிர்வாக சேவை உத்தியோகத்தர்களின் சங்கம் கண்டனம்



கடந்த 2021 டிசெம்பர் 29 ஆம் திகதி தொலைக்காட்சி நிகழ்வொன்றில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் இணைத்தலைவருமான ஹாபிஸ் நஷீர் அஹமட் தெரிவித்த கருத்துக்கு இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்களின் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட கிளை கண்டனம் வெளியிட்டுள்ளது.

இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட கிளையின் தலைவரும், மேலதிக அரசாங்க அதிபருமான சுதர்சனி சிறீகாந்த் தலைமையில் நடைபெற்ற கண்டன ஊடக சந்திப்பில் இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட கிளையின் செயலாளர் வி. வாசுதேவன் உட்பட இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட கிளை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

## கொக்குவில் பாலைமீன்மடுவில் வீடு ஒன்று தீக்கிரையாக்கப்பட்டது

மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள பாலைமீன்மடு 50 வீட்டுத் திட்டத்தில் இரு குழுக்களுக்கிடையில் மது போதையில் ஏற்பட்ட சண்டையில் ஒருவர் படுகாயமடைந்ததுடன் வீடு ஒன்று தீக்கிரையாக்கப்பட்ட சம்பவம் இன்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் இடம்பெற்றுள்ளதாக கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர்.

இரு குழுவினர் மதுபானம் அருந்திய நிலையில் ஏற்பட்ட வாய்த்தர்கம், சண்டையாக மாறியதையடுத்து 119 பொலிஸ் அவசர சேவை இலக்கத்துக்கு கிடைத்த தகவலுக்கமைய பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்றதையடுத்து இரு குழுவினரும் சமாதானமாகினர். இதில் காயமடைந்த ஒருவரை வைத்தியசாலையில் சேர்த்ததுடன் இருகுழுக்களையும் பொலிஸார் சண்டை போடக்கூடாது என எச்சரித்துச் சென்றனர்.

இந்த நிலையில் இந்த குழு ஒன்றுடன் தொடர்புபட்ட நாகநாதன் நவநீதனின் குடும்பத்தினர் பயத்தில் அருகிலுள்ள வீட்டில் நேற்று இரவு சென்று தங்கி இருந்த நிலையில் குறித்தவரின் வீட்டை இன்று அதிகாலையில் இனம் தெரியாத ஒருவர் தீயிட்டுள்ளதையடுத்து வீடு முற்றாக எரிந்து சாம்பராகியுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.



## புதுவருடத்தை முன்னிட்டு மரநடுகை

நாவலடி ஆயுர்வேத மத்திய மருந்தகத்தில் பிறந்திருக்கும் ஆங்கில புதுவருடத்தை முன்னிட்டு தேசிய கொடியேற்றலும் மரநடுகையும் நேற்று சனிக்கிழமை மருந்தகத்தின் வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.றிகாசின் தலைமையில் இடம்பெற்றது.

மருந்தக ஊழியர்களின் பங்குபற்றுதலுடன் வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.றிகாஸினால் தேசியக்கொடியேற்றப்பட்டு மரக் கன்றும் நடப்பட்டது.

அமானா வங்கி ஊழியர் எம்.றபீக்கின் அனுசரணையில் வாழைச்சேனை வலைக்கடை உரிமையாளர் சகோதரர் மாஜிதீனின் பங்களிப்புடன் மரக் கன்றுகளைப் பாதுகாக்கும் சுமார் 12 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆறு அடி உயரம் கொண்ட நான்கு கூடுகள் அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இளைஞர்களுக்கிடையில் மோதல் விநாயகபுரம் பகுதியில் கத்திக் குத்து

திருக்கோவில் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விநாயகபுரம் பகுதியில் நேற்று இளைஞர்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் இரு இளைஞர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை விநாயகபுரம் பகுதியில் இளைஞர்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்கம் கைகலப்பாக மாறியதில் கத்திக் குத்துக்கு இலக்காகி ஒருவரும் தலையில் ஆணி ஏறியவாறு ஒருவரும் திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

32 மற்றும் 35 வயதுடைய இருவரே இவ்வாறு காயமடைந்துள்ளனர் .இந்தச் சம்பவம் தொடர்பில் திருக்கோவில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கலைக்கூறு – 1 பயிற்சிநெறி

மட்டக்களப்பு மாவட்ட சாரண சங்கத்தின் ஏற்பாட்டில் பட்டிருப்பு வலயத்துக்கு உட்பட்ட சாரண ஆசிரியர்களுங்கான கலைக்கூறு – 1 பயிற்சிநெறி இடம்பெற்றது.

பட்டிருப்பு வலயத்தின் சாரணிய இணைப்பாளர் இதயகுமார் ,ஆ. புட்கரன் ஆகியோரின் ஒழுங்கமைப்பில் மேற்கொள்ளப்பட்ட இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட சாரண ஆணையாளர் வே.பிரதீபன், உதவி மாவட்ட ஆணையாளர் (பயிற்சி) இ.கிறிஸ்டி உட்பட பல வளவாளர்கள் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சி நெறியின் தலைவராக உதவி மாவட்ட ஆணையாளர் (பயிற்சி) ஆ.உதயகுமார் உதவி பயிற்றுநர் தலைவர் ஆகியோரும் பயிற்சி நெறியின் உதவித்தலைவராக உதவி மாவட்ட ஆணையாளர் (ஊடகம்) ஆ.புட்கரன் உதவி பயிற்றுநர் தலைவர் ஆகியோரும் பணியாற்றினர்.



காலைக்கதிர் மாலைப்பதிப்பு






# நியூஸிலாந்துட முதல் டெஸ்ட்டின் 2ஆம் நாள் பங்களாதேஷ் அணியும் சிறப்பான பதிலடி

பங்களாதேஷ் - நியூஸிலாந்து அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்று நிறைவடைந்துள்ளது.

இந்தப் போட்டியின் நாணயச்சுழற்சியில்வென்றபங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட நியூஸிலாந்து அணி அனைத்து விக்கெட்களையும் இழந்து 328 ஓட்டங்களை பெற்றது.

டெவொன் கொன்வே 122 ஓட்டங்களையும் ஹென்றி நிக்கோல்ஸ் 75 ஓட்டங்களையும் வில் யங் 82 ஓட்டங்களையும் எடுத்தனர். பங்காதேஷின் பந்துவீச்சில் சொரிபுல் இஸ்லாம் மற்றும் மெஹதி ஹசன் ஆகியோர்தலா3விக்கெட்களை வீழ்த்தினர்.

இதனையடுத்து தனது முதலாவது இன்னிங்சிற்காக துடுப்பெடுத்தாடிவரும் பங்களாதேஷ் அணி, இன்றைய இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவு வரை இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 175 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

அவ்வணி சார்பாக நஜ்முல் ஹொசைன் 64 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழந்தார். மஹ்முதுல் ஹசன் ஜோய் 70 ஓட்டங்களுடனும், அணித் தலைவர் மொமினுல் ஹக் 8 ஓட்டங்களுடனும் அட்டமிழக்காது களத்தில் இருந்தனர். நாளை போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் ஆரம்பித்துள்ளது.

# ஊக்கமருந்து சோதனையில் சிக்கிய இந்திய இளம் ஓட்ட வீராங்கனை



ஜூனியர் பிரிவில் இந்தியாவின் அதிவேக ஓட்டப்பந்தய வீராங்கனையாக வலம் வந்த டெல்லியைச் சேர்ந்த 20 வயதான தரண்ஜீத் கவுர், ஊக்கமருந்து சோதனையில் சிக்கியுள்ளார்.

சில மாதங்களுக்கு முன்பு நடந்த 23 வயதுக்குட்பட்டோருக்கான தேசிய தடகள சம்பியன்ஷிப் போட்டியில் 100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் ஓட்டப் பந்தயங்களில் முறையே 11.54 வினாடி மற்றும் 23.57 வினாடிகளில் இலக்கைக் கடந்து தங்கப் பதக்கங்களை அவர் வென்றிருந்தார்.

தேசிய திறந்த நிலை சம்பியன்ஷிப்பிலும் அவர் ஆதிக்கம் செலுத்தினார். இந்த நிலையில் போட்டிகளின் போது அவரிடம் சேகரிக்கப்பட்ட மாதிரிகள் தேசிய ஊக்கமருந்து தடுப்பு ஆய்வகத்தில் பரிசோதனை செய்ததில் தடை செய்யப்பட்ட ஊக்கமருந்தை பயன்படுத்தியிருப்பது கண்டறியப் பட்டுள்ளது. அடுத்த கட்ட சோதனையிலும் அவர் ஊக்கமருந்து பயன்படுத்தியது நிரூபணமானால் 4 ஆண்டுகள் வரை தடையை எதிர்கொள்ள வேண்டி வரும் என்பது குறிப்பிடத்தக்கது.




# ஏ.டி.பி. டென்னிஸ் குழுத்தொடரில் டனில் மெட்வடேவ் அதிர்ச்சித் தோல்வி

ஆஸ்திரேலியா ஓபின் டென்னிஸ்தொடர் இந்த மாதம் 17 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. உலகின் முன்னணி டென்னிஸ் நட்சத்திரங்கள் பங்கேற்கும் இந்த தொடரின் இறுதிப் போட்டி ஜனவரி 30 ஆம் திகதி நடைபெறவிருக்கிறது.

இந்தத் தொடருக்கு முன்னதாக, புதிதாக அறிமுகமாகியுள்ள ஏ.டி.பி. டென்னிஸ் குழுத் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது.

இதில் முன்னணி டென்னிஸ் நட்சத்தி ரங்கள்தங்கள் நாட்டின் மற்ற வீரர்களுடன் குழுவாக இணைந்து விளையாடி வருகின்றனர்.

இந்தத் தொடரில் இன்று சிட்னி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில்பிரான்ஸின் உகோ ஹம்பர்ட்டிற்கு எதிரான போட்டியில் ரஷ்யாவின் முன்னணி டென்னிஸ் வீரர் டனில் மெட்வடேவ் அதிர்ச்சித் தோல்வியடைந்தார். உலகின் இரண்டாம் நிலை வீரரான மெட்வடேவ் தரவரிசையில் 35 ஆவது இடத்தில் உள்ள உகோ ஹம்பர்ட்டால் வீழ்த்தப்பட்டார்.

இந்தப் போட்டியில் முதல் செட்டை 6-7 என்ற கணக்கில் இழந்த உகோ ஹம்பர்ட் பின்னர் அதிரடியாக விளையாடி 7-5, 7-6 என்றகணக்கில் வெற்றி பெற்றிருந்தார்.




# இங்கிலாந்து, அயர்லாந்து தொடர்களுக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணி விவரம் அறிவிப்பு

இங்கிலாந்து ரி-20 தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணியில் காயத்திலிருந்து மீண்டுள்ள அணித்தலைவர்கைரன்பொலாா்ட் சேர்க்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான 5 போட்டிகள் கொண்ட ரி-20 தொடர் ஜனவரி 22 முதல் 30 வரை பார்படொஸில் நடைபெறவிருக்கிறது.

இதற்கு முன்னதாக 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் ஒரேயொரு ரி-20 போட்டி கொண்ட தொடர்களில் அயர்லாந்தை மேற்கிந்தியத் தீவுகள் அணி எதிர்கொள்ள விருக்கிறது. இந்தத் தொடர்கள் ஜனவரி 8 முதல் 16ஆம் திகதி வரை ஜமைக்காவில் நடைபெறவுள் ளன.

இந்தத் தொடர்களுக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணியை அதன் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. காயம் காரணமாக பாகிஸ்தான் தொடரில் விளையாடாத ரி-20 அணித்தலைவர் கைரன் பொலாா்ட் மீண்டும் அணிக்குத் திரும்பியுள்ளார்.

இங்கிலாந்து மற்றும் அயர்லாந்து ரி-20 தொடர்களுக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணி - கைரன் பொலாா்ட் (அணித்தலைவர்), நிகோலஸ் பூரன், பபியன் அலென் (இங்கிலாந்து தொடருக்கு மட்டும்), டரன் பிராவோ (இங்கிலாந்து தொடருக்கு மட்டும்), ரொஸ்டன் சேஸ், ஷெல்டன் கொட்ரெல், டொமினிக் டிரேக்ஸ், சாய் ஹோப், அகீல் ஹொசைன், ஜேசன் ஹோல்டர், பிராண்டன் கிங், கை மேயர்ஸ், ரோவ்மன் பவெல், ரொமாரியோ ஷெப்பர்ட், ஒடீன் ஸ்மித், ஹைடன் வால்ஷ். அயர்லாந்துடனான ஒருநாள் தொடருக்கான அணி: கைரன் பொலாா்ட் (அணித்தலைவர்), சாய் ஹோப், மார்ப்ரூக்ஸ், ரொஸ்டன் சேஸ், ஜஸ்டின் க்ரீவ்ஸ், ஜேசன் ஹோல்டர், அகீல் ஹொசைன், அல்சாரி ஜோசப், குடகேஷ் மோடி, ஜேடென் சீல்ஸ், நிகோலஸ் பூரன், ரொமாரியோ ஷெப்பர்ட், ஒடீன் ஸ்மித், டெவொன் தோமஸ்.

# புகைப் பிடிப்பவர்களின் எண்ணிக்கை நாட்டில் குறைவடைந்து வருகின்றது



2015 ஆம் ஆண்டளவில் நாட்டில் புகை பிடிக்கும் பழக்கத்துக்கு அடிமையான ஆண்களின் எண்ணிக்கை 15 வீதத்தில் இருந்து தற்போது 9.1வீதம் வரை குறைந்துள்ளதாக புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகார சபை தெரிவித்துள்ளது.

இலங்கையில் புகையிலை மற்றும்மதுபானப்பாவனையை குறைப்பதற்காக, புகையிலைக்கான புதிய வரி சூத்திரத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக புகையிலை மற்றும் மதுபானம் மீதான தேசிய அதிகாரசபையின் தலைவர் சமாதி ராஜபக்ஷ தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டார்

இதுதொடர்பாகஅவர்மேலும் கருத்து தெரிவிக்கையில் –

புகையிலை பாவனையால் உலகில் நாளொன்றுக்கு 8 மில்லியனுக்கும் அதிகமான மக் கள் உயிரிழக்கின்றனர். அவர்களில் 7 மில்லியனுக்கும் அதிகமானோர் தொடர்ச்சியாக நாள்தோறும் புகைப்பிடிப்பவர்கள். மற்றும் சுமார் 1.2 மில்லியன் பேர் தொடர்ச்சியாக புகைபிடிக்காதவர்கள் என்றும் அவர் கூறினார். உலகில் அதிகளவிலான மக்கள் மரணமடையும் ஒரே நுகர்வோர் பொருளாக சிகரெட்டை அடையாளங் காண முடியும் என்றும் அவர் கூறினார். அத்துடன், புகை பிடிப்பதால் இலங்கையில் நாளொன்றுக்கு 60 பேர் உயிரிழக்கின்றனர். புதிய கொவிட் தொற்றை விடவும் இது மிகவும் ஆபத்தான நிலை.

புகையிலை பாவனையிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்காக நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ 2006 ஆம் ஆண்டு இதற்கான முயற்சியை மேற்கொண்டார். அதன்படி, நாட்டில் புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகாரசபை அமைக்கப்பட்டது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் புகையிலை உற்பத்திக்கான தற்போதைய வரி விதிப்பு அமைப்பு முறைசாரானது மற்றும் சிக்கலானது. புகையிலைக்கான சரியான வரிவிதிப்பு சூத்திரத்தை அறிமுகப்படுத்துவதன் முக்கியத்து–வத்தை உணர்ந்த அதிகாரசபை, 2020 ஆம் ஆண்டில் ஒரு நிபுணர் குழுவை நியமித்துள்ளது. இதன்படி, வரி விதிப்பு சூத்திரம் கடந்த செப்ரெம்பர் 29ஆம் திகதி சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவிடம் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது. கடந்த நவம்பர் 12 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் சிகரெட்டுகளுக்கான புதிய வரி மற்றும் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. புகையிலை மற்றும் மது பானம் மீதான தேசிய அதிகார சபையால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வரிவிதிப்பு தொடர்பான இந்தப் புதிய தொகுதியை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் புகைப்பிடிப்பதில் ஈடுபடுவதைக் குறைக்க முடியும். மேலும், புகைபிடிப்பதால் ஏற்படும் சுகாதார கேடுகளைக் குறைப்பதன் மூலம் ஆரோக்கியமான எதிர்கால சந்ததியைக் கட்டியெழுப்புவதுடன், அரசாங்க வருமானத் தையும் அதிகரிக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இந்த ஆண்டுக்கான முதலாவது அமைச்சரவை நாளை கூடுகிறது!

மிக முக்கியமான ஓர் அமைச்சரவைக் கூட்டம் நாளை நடைபெறவுள்ளது.

இந்த ஆண்டில் நடைபெறவுள்ள முதல் அமைச்சரவைக் கூட்டம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

இறுதியாக கடந்த டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தின் போது நாட்டின் பொருளாதார நிலைமைக்கள் தொடர்பாக ஆராய்வதற்காக மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலையும், திறைசேரியின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகலவையும் நாளைய அமைச்சரவைக் கூட்டத்துக்கு அழைப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் இந்தச் சந்திப்பில் விசேட கவனம் செலுத்தப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொலிஸ் சேவைக்குத் தகுதியே இல்லாத ஐயாயிரம் பேர் கடமையில் உள்ளனராம்!

நாட்டில் பொலிஸ் சேவைக்குத் தகுதியில்லாத ஐயாயிரம் பேர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உள மற்றும் உடல் ஆரோக்கிய காரணிகளின் அடிப்படையில் ஓய்வுறுத்தப்பட வேண்டிய சுமார் ஐயாயிரம் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறானவர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள காரணத்தால் பொலிஸ் திணைக்களத்தின் ஒழுக்க நெறிகளைப் பேணுவதில் சிக்கல்கள் உருவாகியுள்ளது எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பல்வேறு பயங்கரவாத செயற்பாடுகளால் உபாதைகளுக்கு உள்ளான 537 பேரும், வெறும் பொலிஸ் பணிகளில் ஈடுபட்ட போது நோய்வாய்ப்பட்ட 1305 பேரும், தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்ட 2 ஆயிரத்து 699 பேரும், உளவியல் ஆரோக்கியப்பிரச்சினைகள் காரணமாக இலகு பணிகளில் அமர்த்தப்பட்டுள்ள 411 உத்தியோகத்தர்களும் இந்த ஐயாயிரம் என்ற எண்ணிக்கையில் உள்ளடங்குகின்றனர்.

இவ்வாறு ஆரோக்கிய குறைபாடுகள் உடைய உத்தியோகத்தர்களை ஓய்வுறுத்தி அவர்களுக்குப் பதிலீடாக புதிய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட வேண்டுமென பொலிஸ் மா அதிபர் அரசாங்கத்திடம் கோரியுள்ளார்.

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் மொத்தமாக 85 ஆயிரம் பேர் கடமையாற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நான்கு சக பொலிஸ் உத்தியோகத்தர்களைச் சுட்டுக் கொன்ற சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஒரு லட்சத்து 20 ஆயிரம் பேர் தொழில் நிமித்தம் வெளியேற்றம்

தொழில் வாய்ப்புக்களுக்காக கடந்த ஆண்டில் சுமார் ஒரு லட்சத்து 20 ஆயிரம் இலங்கையர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர் என வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் தொடர்பான இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

இவர்களில் அதிகளவானோர் கட்டாருக்கே சென்றுள்ளனர். அதற்கமைய கடந்த ஆண்டில் மாத்திரம் தொழில் நிமித்தம் கட்டார் சென்றுள்ளோர் எண்ணிக்கை 30 ஆயிரம் ஆகும்.

இதற்கு அடுத்தபடியாக 27 ஆயிரம் பேர் சவூதிக்கும் , 20 ஆயிரம் பேர் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கும் சென்றுள்ளனர். அதே போன்று 1600 பேர் சைப்ரஸ் நாட்டுக்கும், 1400 பேர் தென் கொரியாவிற்கும் சென்றுள்ளனர். அதற்கமைய கடந்த ஆண்டில் மாத்திரம் ஒரு லட்சத்து 20 ஆயிரம் இலங்கையர்கள் தொழில் நிமிர்த்தம் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

# இலங்கையில் தங்கம் ஒன்றின் விலை ஒரேமாதத்தில் 5 ஆயிரம் ரூபா எகிறியது!

இலங்கை சந்தையில் தங்கத்தின் விலை ஒரே மாதத்தில் பவுணுக்கு 5 ஆயிரம் ரூபாவால் அதிகரித்துள்ளது.


இலங்கை சந்தையில் 22 கரட் தங்கத்தின் விலை ஒரு லட்சத்து 12 ஆயிரத்து 500 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படும் நிலையில், 24 கரட் தங்கம் ஒரு லட்சத்து 21 ஆயிரத்து 500 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது.

உலக சந்தையில் தங்கத்தின் விலை அமெரிக்க டொலரின் விலைக்கேற்ப நிர்ணயிக்கப்படுகின்றது.

இந்த நிலை வரப்படி ஓர் அவுன்ஸ் தங்கத் தின் விலை 1,818 டொலராகக் காணப்படுகின்றது.

# இந்துமத பாரம்பரியங்களைப் பேண நல்லூர் ஆலயத்தில் புதிய நடைமுறை!





நல்லூர் ஆலயத்தில் இந்துமத பாரம்பரியங்களை பாதுகாக்கும் வகையில் புதிய நடைமுறை நேற்று (சனிக்கிழமை) ஆலய நிர்வாக அதிகாரியால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அரைக் காற்சட்டை அணிந்து வரும் ஆண்கள் மற்றும் முழங்கால் தெரியும் வகையில் ஆடை அணிந்து வரும் பெண்களுக்கு ஆலய முகப்பில் சால்வை வழங்கப்படும் நடைமுறையே நேற்று அறிமுகப்படுத்தப்பட்டது. ஆலயத்துக்கு சால்வையை அணிந்து சென்று வழிபாடுகள் நிறைவடைந்த பின்னர் அதனை பை ஒன்றிலிட்டு வழங்கப்பட்ட இடத்திலுள்ள பெட்டியில் மீளவைக்க வேண்டும் என்று அறிவுறுத்தல் வழங்கப் படுகிறது. ஆலயத்தில் இந்துமத பாரம்பரியங்களை பாதுகாக்கும் வகையில் இந்த நடைமுறை தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும் என்று தெரிவிக் கப்பட்டது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.01.2022இல் வெளியிடப்பெற்றது.